IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 71/2023

Deposition of Witness : PW 2

Name : முருகன் (வயது – 86)

Father's Name /W/o : த/பெ தொப்பைநாயக்கர்

Religion : இந்து

Calling : –

Address : சங்கரம்பாடி

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 11.03.2026.

## குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கை யார் தாக்கல் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 5 வாதிகள் முருகன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் முருகன் வழக்கு சொத்தை அவர் மகன் மீது எழுதி வைத்துள்ளார் அதனை திரும்ப வழங்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். முருகன் யார் பெயரில் என்ன பதிவு செய்துள்ளார் என்றால் மகன் மீது எழுதி வைத்துள்ளார். என்ன ஆவணம் பதிவு செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. முருகன் எழுதி வைத்த சொத்தை கேட்டு வாதிகள் பரிகாரம் கோரியுள்ளதால் அவர்களுக்காக சாட்சியம் அளிக்கவந்துள்ளேன் என்றால் சரிதான். முருகன் எழுதி வைத்த ஆவணம் படி அவர் மகன் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. முருகன் அவர் மகன் பெயரில் சொத்து எழுதி வைப்பதற்கு முன்பு பட்டா முருகன் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்து பக்கத்தில் என் சொத்து உள்ளது என்று என்

பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் அதற்கான ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. முருகன் மற்றும் அவர் குடும்பத்தினருக்குள் என்ன ஏற்பாடு நடந்தது என்ற விபரம் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதிகள் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வாதிகள் சொன்னதை தான் என் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய விபரங்கள் வாதிகள் சொன்னபடி தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**